**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS COURT, RANIPET. RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII, Cr.P.C)
**SPLCC.No.19/2025 - PW-18**

| | |
|---|---|
| Name | திரு.திருநாவுக்கரசு |
| Father Name | எட்டியப்பன் |
| Village /Area | வேலூர் |
| Taluk | வேலூர் |
| Occupation | காவல் துணை கண்காணிப்பாளர் |
| Age | 54 |
| Religion | இந்து |
| Aadhar Card No. | 555880026436 |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of 09.10.2025.

**எதிரிகள் 3,4,7 ஆஜர். 2, 5, 6 எதிரிகள் ஆஜர் இல்லை. பிரிவு பா.நா.சு.ச.355ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை –**

நான் தற்போது வேலூர் மாவட்ட குற்றப்பிரிவில் காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2014ம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் 2017ம் ஆண்டு செப்டம்பர் மாதம் வரை வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு அலுவலகத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்தேன். எனக்கு முன்பு இருந்த காவல் ஆய்வாளர் திரு.ரஜினிகாந்த் என்பவர் புலன் விசாரணை செய்து வைத்திருந்த வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு குற்ற எண்.07/2012 வழக்கினை நான் ஆய்வு செய்தேன். கடந்த 2001ம் ஆண்டு மத்திய அரசு கிராமப்புற மேம்பாட்டு அமைச்சகம் மூலம் ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டு திட்டம் மூலம் தரிசு நிலங்களை மேம்படுத்துவது, நீர்

நிலைகளை பாதுகாப்பது, இயற்கை வளங்களை மீட்டெடுப்பதற்கான திட்டம் கொண்டுவரப்பட்டது. இந்த திட்டம் தமிழகத்தில் வேளாண் பொறியியல் துறை மூலம் செயல்படுத்தப்பட்டது. இந்த திட்டம் கடந்த 2007ம் ஆண்டு மற்றும் 2008ம் ஆண்டு வரை வேலுர் மாவட்டம் தற்போது இராணிப்பேட்டை மாவட்டம், வாலாஜா உட்கோட்டம் வேளாண்மை பொறியியல் துறை மூலம் செயல்படுத்தப்பட்ட போது முதல் எதிரி திரு.ராமலிங்கம் அப்போதைய உதவி செயற்பொறியாளர், இரண்டாம் எதிரி திரு.சங்கீத்ராஜ் அப்போதைய உதவி செயற்பொறியாளர், மூன்றாம் எதிரி திரு.ரூபன் குமார் அப்போதைய உதவி பொறியாளர், நான்காம் எதிரி திரு.பாஸ்கரன் அப்போதைய உதவி பொறியாளர், ஐந்தாம் எதிரி திரு.ஜெய்சங்கரன் அப்போதைய ஓவர்சிஸ், ஆறாம் எதிரி திரு.பக்தவச்சலம் அப்போதைய வார்டு மெம்பர், ஏழாம் எதிரி திரு.ராஜேந்திரபிரசாத் அப்போதைய வார்டு மெம்பர் ஆகியோர்கள் குற்றமுறு சதி செய்து மேற்சொன்ன திட்டத்தின் படி வேலைகள் செய்யாமல், போலியான இரசீதுகளை பயன்படுத்தி ரூ.10,27,397யை நம்பிக்கை மோசடியாக கையாடல் செய்து அரசை ஏமாற்றி 2007-2008 வரையான காலகட்டத்தில் அவர்களது பொது ஊழியர் என்ற பதவியை அதிகார துஷ்பிரியோகம் செய்து அரசை போலீயான ஆவணங்கள் தயார் செய்ததன் மூலம் மோசடியாக ஏமாற்றியுள்ளார்கள் என்பது இவ்வழக்கின் சாட்சிகளின் பட்டியல் மற்றும் ஆவணங்களில் இருந்து தெரிய வந்தது. எதிரிகள் 1 முதல் 7 வரை உள்ளவர்கள் மீது கணம் நீதிமன்றத்தில் குற்ற வழக்கு தொடர இசைவாணையை ஊழல் தடுப்பு சட்டம் பிரிவு 19ன் கீழ் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குநரகம்

மூலம் முதல் எதிரி, இரண்டாம் எதிரி, நான்காம் எதிரி ஆகியோர்களுக்கு வேளாண்மை உற்பத்தி ஆணையர் அவர்களுக்கும் ஐந்தாம் எதிரி ஜெய்சங்கரன் அவர்களுக்கு, திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு, மூன்றாம் எதிரி ரூபன் குமார் அவர்களுக்கு, வேளாண்மை பொறியியல் துறை முதன்மை பொறியாளர் அவர்களுக்கும், ஆறாம் எதிரி பக்தவச்சலம் மற்றும் ஏழாம் எதிரி ராஜேந்திர பிரசாத் அவர்களுக்கு வேலூர் மாவட்ட நீர் நிலை மேம்பாட்டு முகமை திட்ட அலுவலர் அவர்களுக்கு வழக்கின் வரைவு இறுதியறிக்கை மற்றும் ஆவணங்கள் அனுப்பப்பட்டிருந்தது. ஐந்தாம் எதிரி ஜெயசங்கரன் மீது கணம் நீதிமன்றத்தில் குற்ற வழக்கு தொடர ஊழல் தடுப்புச் சட்டம் பிரிவு 19ன் கீழ் இசைவாணை வழங்க 2015ம் ஆண்டு திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் வழக்கின் தொடர்புடைய ஆவணங்களை காண்பித்தேன். அவர் அதனை பார்வையிட்டு என்னிடம் வழக்கு சம்மந்தமான விவரங்களை நேரடியாக கேட்டு தெரிந்து கொண்டார். பிறகு, அவரது செயல்முறை ஆணை ROC.No.16978/2014/PA2, 13.06.2015 தேதியிட்ட இசைவாணையை கடிதம் வாயிலாக பெற்றேன். அந்த இசைவாணைதான் அ.சா.ஆ.13 ஆகும். பிறகு, நான் பணிமாறுதலில் சென்றதால் வழக்கு கோப்பை வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கூடுதல் காவல் கண்காணிப்பாளர் அவரிடம் ஒப்படைத்து சென்றேன்.

**குறுக்கு விசாரணை எதிரிகள் தரப்பில் –**

இந்த வழக்கை நான் 2015ம் ஆண்டு, ஜனவரி மாதம் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். விசாரணைக்கு

எடுத்துக்கொண்ட தேதி நினைவில்லை. நான் வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் ஆய்வாளராக பொறுப்பு ஏற்பதற்கு முன்பே எனக்கு முன்பு பணிபுரிந்த ஆய்வாளர் திரு.ரஜினிகாந்த் பணியில் இருந்து மாறுதல் பெற்று சென்றுவிட்டார். திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவரிடம் ஆவணங்களை நான் நேரில் காண்பித்த தேதி எனக்கு சரியாக நினைவில்லை. நான் புலன் விசாரணை சம்மந்தமாக காவல் நிலையத்தை விட்டு வெளியே சென்றால் அந்த விவரத்தை காவல் நிலைய நாட்குறிப்பில் பதிவு செய்வோம் என்றால், சரிதான். அவ்வாறு செல்லும் விவரத்தை வழக்கு நாட்குறிப்பில் எழுதுவோம் என்றால், சரிதான். நான் திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவரிடம் ஆவணங்களை காண்பிக்க சென்ற விவரத்தை வழக்கு நாட்குறிப்பில் பதிவு செய்தேன். அந்த வழக்கு நாட்குறிப்பு தற்போது இல்லை. நான் திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவரிடம் ஆவணங்களை காண்பிக்க செல்லவில்லை என்றாலும், எந்த விசாரணையும் செய்யவில்லை என்றாலும், ஒரு எதிரிக்கு மட்டும் இசைவாணை வாங்க விடுபட்ட நிலையில் அதனை பூர்த்தி செய்வதற்காக நான் தான் சென்றதாகவும், விசாரணை செய்ததாகவும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், அது சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளிப்பதால்தான் என்னால் எந்த தேதியும் சொல்ல இயலவில்லை என்றால், அது சரியல்ல. அ.சா.ஆ.13ல் எப்போது நான் கடிதம் கொடுத்தேன் என்ற விவரம் Referenceல் இல்லை என்றால், அது சரியல்ல. Referenceல் நான் கடிதம் கொடுத்த தேதி இல்லை என்றால், சரிதான்.

**மறு விசாரணை –**

**இல்லை.**

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness and admitted by him/her to be correct.

M SELVAM

Principal District Judge, Ranipet
Digitally signed by M SELVAM
DN: cn=M SELVAM, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

Principal District and Sessions Judge,
Ranipet